**தலைப்பு 199 – ஆரம்ப கைத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன ஆரம்ப கைத்தொழில் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 199 – ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆரம்ப கைத்தொழில் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட குறிப்புக்களில் பொழிப்பாக்கி தரப்பட்டுள்ளன. கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3 |
| | | 2. செயல் நிமித்த கட்டுநிதியை தீர்த்து வைப்பதில் தாமதங்கள் | 2.9 |
| | | 3. பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை | 2.10 |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முகாமைத்துவ குறைபாடுகள் | 2.6 |
| | | 2. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.12 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.1.2(ஆ) |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2(இ) |
| | | 3. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை. | 2.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4. | பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் | 2.3 |
| | | 5. | பணத்திற்கான பெறுமதிக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் | 2.6 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படாமை | 2.4(அ) |
| | | 2. | ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல். | 2.4(இ) |
| | | 3. | பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் பலவீனங்கள் | 2.7 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை. | 2.8(அ) |
| | | 2. | அதிக நிதி ஏற்பாட்டை வழங்குதல் | 2.8(ஆ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு அமைச்சிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நாளது வரையாக்கப்பட்ட அமைச்சின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர், தற்பொழுது சேவை ஈடுபட்டுள்ள பதவியணியினர் என்பன தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்ட கால அட்டவணை (Time Schedule) அந்த நடவடிக்கைகளின் வெளியீடு / விளைவு (Output/ Outcome) என்பன மதிப்பீடு செய்யப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டு நிதித் தேவைப்பாட்டுத் திட்டம் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை**

(i) கைத்தொழில்களுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஆரம்ப கைத்தொழில் பிரிவு அபிவிருத்தியின் கீழ் மாத்தறை, காலி, அம்பாறை ஆகிய 03 விவசாய வலயங்களுக்கும் ஒலுவில், கல்பிட்டி, மன்னார் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் 02 மீன்பிடி வலயங்களுக்கும் விவசாய செயன்முறை வலயங்களை தோற்றுவிப்பதற்காக ரூபா 105 மில்லியன் தொகையும் வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மாதிரி செயன்முறை வலயங்களைத் தோற்றுவிப்பதற்கு ரூபா 10 மில்லியன் தொகையும் ஆக ரூபா 115 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆண்டின் போது எதுவித செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆரம்ப கைத்தொழில் பிரிவு அபிவிருத்திக்குத் தேவையான சுற்றாடலை தயார்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் உறுதியானவை என்பதனை உறுதிப்படுத்தும் தொடக்க நடவடிக்கையாக ரூபா 04 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பிரதான செயற்றுடுகளுக்கு முரணான நடவடிக்கைகள்**

அமைச்சு தனது குறிக்கோள்களுக்குரிய செயற்பாடுகளுக்கு முரணாக கேகாலை மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக அழிவடைந்த வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் தமன பிரதேச செயலாளர் பிரிவில் கலபாமுல அணைக்கட்டை நிர்மாணிப்பதற்காக ரூபா 57.25 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**(இ) எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 23 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மீன்பிடி ஏற்றுமதி உயர் வலயத்தை தோற்றுவிப்பதற்காக 20 கடல் படகுகளும், 750 வலைகளும் 125 வள்ளங்களும் கொள்வனவு செய்வதற்கு மற்றும் சங்குகளை வளர்க்கும் 03 கடற் பூங்காகாக்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் ரூபா 18.90 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 150 வலைகள், 79 வள்ளங்கள், என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் சங்குகளை வளர்க்கும் கடற் பூங்கா செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதான செயற்பாடான பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் வலயங்களை உருவாக்குவதன் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் உற்பத்தி வலயங்களைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 19 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதி வரை ரூபா 1.20 மில்லியன் செலவு செய்து அடிப்படை நடவடிக்கைகளுக்குரிய சாத்திய வள ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்தல், திட்டங்களைத் தயாரித்தல், பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல்

என்பவற்றை உள்ளடக்கிய சில தொடக்க செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் நிதி ஆண்டு முடிவடைந்து 248 நாட்களின் பின்னர் 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2 அமுல்ப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் கமத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய உற்பத்தி துறையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்காக சிறிய அளவிலான உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், முதலீடுகள் தொடர்பாக கவர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதலின் மூலம் வணிகரீதியான மற்றும் ஏற்றுமதி சார்ந்த விவசாயத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 750 மில்லியன் நிதி ஏற்பாடு அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 335 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன சீராக்கல் மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிக வறுமையுள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அனுராதபுரம், முல்லைத்தீவு, மொனராகலை, மாத்தளை, பொலன்னறுவை ஆகிய ஏழு மாவட்டங்களிலுள்ள 350 விவசாய உற்பத்தி சங்கங்களுக்கு உதவியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 46.91 மில்லியன் செலவு செய்து கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டம் ஆரம்பித்து ஒரு ஆண்டு காலம் கடந்திருந்தும் கடன் வழங்கும் செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 7.12 மில்லியன் பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்.**

**பெறுகைகளைத் திட்டமிடல்**

மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 864.80 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 217.55 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) அன்னாசி நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கு, கால்நடைப் பண்ணை செயற்திட்டத்திற்கு மற்றும் கருவா ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 160 மில்லியன் மொத்த தொகை பெறுகைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்தும் இப் பெறுகைகள் இடம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) ரூபா 6.14 மில்லியன் கூட்டு மொத்தச் செலவில் மின்சாரத்திலான 54 சட்டி பானை செய்யும் இயந்திரங்கள், பெரிய குளங்களில் மீன் வளர்ப்பதற்குத் தேவையான உபகரணங்கள், கணனி துணைக்கருவிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அவற்றிற்காக பெறுகைத் திட்டத்தில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துகள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிக்காமை

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு பயன்படுத்திய 16 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போதும் கடந்த ஆண்டின் போதும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கை சுற்றிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

ஏனைய 08 நிறுவனங்களுக்குச் சொந்தமான 10 வாகனங்கள் அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அந்த வாகனங்களைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) கமநல சேவைகள் நிலையத்தைத் தோற்றுவிக்கும் குறிக்கோளுடன் அமைச்சினால் ரூபா 30.84 மில்லியன் செலவு செய்து உயரமான மரக்கிளைகளை வெட்டும் இயந்திரம், உயர் அழுத்த தெளிகருவி இயந்திரம், காடு வெட்டும் இயந்திரம் என்பன ஒரு வகையில் 375 வீதம் கொள்வனவு செய்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்க குறிக்கோளானது ஏற்றுமதி விவசாயப் பயிர் துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உபகரணங்களின் மூலம் சேவைகளை வழங்குவதாக இருந்த போதிலும் உரிய நான்கு இயந்திரங்களையும் உள்ளடக்கிய தொகுதியை ஒரு நலன் பெறுநருக்கு வழங்குவதனால் ஒரு காலப்பகுதியில் இந்த அனைத்து இயந்திரங்களிலிருந்தும் ஒரே தடவையில் சேவையை வழங்குவதற்கு முடியாதிருந்தமை உரிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்தது.

(ii) உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக முதலீட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது நலன்களை வழங்குகின்ற விவசாயிகளால் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஏனைய உபகரணங்களான கத்தி, மண்வெட்டி, அலவாங்கு ஆகிய 14 வகையான கை உபகரணங்களைக் கொள்வனவு செய்து அப்பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உரிய நான்கு இயந்திர உபகரணங்களை வழங்குவதற்குப் பொருத்தமானவர் என்பதற்கான வரையறைகள் தயாரிக்கப்பட்டிருந்தும் இதுவரை உபகரணத் தொகுதி வழங்கப்பட்டுள்ள 112 நலன் பெறுனர்களும் இதுவரை கை உபகரணங்களைக் கொள்வனவு செய்து பற்றுச்சீட்டுக்களைச் சமர்த்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்த ரூபா 21.63 மில்லியன் பெறுமதியான இயந்திரங்களுக்கு மத்தியில் உயர்ந்த மரக்கிளைகளை வெட்டும் இயந்திரம், காடு வெட்டும் இயந்திரம், உயர் அழுத்த தெளி கருவி இயந்திரம், புதர்களை வெட்டும் இயந்திரம் என்பவைகளின் 263 தொகுதிகள் வீதம் 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரை உரிய நலன்பெறுநர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மாவட்ட ஏற்றுமதி விவசாய அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேன் உற்பத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 19.46 மில்லியன் செலவு செய்து 12,000 தேன் ஈ பெட்டிகளையும் அதற்குத் தேவையான உபகரணங்களையும் கொள்வனவு செய்து பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரால் 08 வாரங்களுக்குள் பெட்டிகள் வழங்கப்படாதிருந்ததுடன் 2018 மே 31 ஆந் திகதி வரை 3753 தேன் ஈ பெட்டிகள் மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக அத்திகதி தேன் ஈ பெட்டிகளை வழங்கும் உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

## 2.6 பணத்திற்கான பெறுமதிக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் அமைச்சின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய சீஎல்ஏ/2/3/4 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 2.2.2 மற்றும் 2.7.1 ஆம் பந்திகளின் பிரகாரம் வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை அரசாங்க தூதுவராலயங்கள் அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களின் அமைச்சுக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உத்தியோகபூர்வ அல்லது உத்தியோகபூர்வமற்ற பயணங்களில் ஈடுபடக்கூடாது என்ற போதிலும் தனிப்பட்ட ரீதியாகக் கிடைத்த அழைப்பிற்காக வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனவும் அந்த உத்தியோகபூர்வ பயணங்களின் எண்ணிக்கை 05 இனை மிகைக்கலாகாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் அமைச்சர் மற்றும் அவரின் உத்தியோகத்தர்கள் 10 சந்தர்ப்பங்களின் போது தனிப்பட்ட ரீதியாகக் கிடைத்த அழைப்பிற்காக வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது வெளி நாட்டிற்குச் சென்றமை தொடர்பாக ரூபா 9,848,379 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணத்தின் பின்னர் நாட்டிற்கு வருகை தந்து 02 வாரங்களுக்குள் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் மற்றும் பயணங்களின் காரணமாக நாட்டிற்கு கிடைக்க கூடிய நலன்கள் மற்றும் அவதானிப்புக்களுடன் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சர் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயணங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சீனாவின் குவன்கேசோவில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியின் மற்றும் மீன் போட்டியின் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகளுக்காக பங்குபற்றிய விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு 2015 மே 15 ஆந் திகதி 02/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றிக்கையின் ஒழுங்க விதிகளின் பிரகாரம் அமையப்படியாக ஒரு நாளைக்கு ஐ.அ.கு.டொலர் 40 வீதம் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக ஐ.அ.கு டொலர் 75 வீதம் 08 நாட்களுக்கு ஐ.அ.கு டொலர் 600 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணத்தைப் பூர்த்தி செய்து மீண்டும் நாட்டுக்கு திரும்பி வந்து 07 நாட்களுக்குள் பயணம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்னிணைப்பு (ஊ) இல் உள்ள படிவத்தின் பிரகாரம் அறிக்கையானது வெளிநாட்டுப் பயணம் அங்கீகரித்த உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் 09 வெளிநாட்டுப் பயணங்களின் போது பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் அந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(உ) 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 07(அ) பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற போது மேற்கொள்ளப்பட்ட படிக் கொடுப்பனவுகள் ஒரு செலவாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 15 உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களின் போது வெளிநாடு சென்ற போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 6.60 மில்லியன் படிக்கொடுப்பனவு முற்பணமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.7 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

அமைச்சிற்காக ஒரு இணைய தளம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அதனூடாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சில் பொது மக்களின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்காக முறைப்பாட்டுப் பெட்டி பயன்படுத்தப்படாதிருந்ததுடன் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்காக ஒரு பதிவேடு பேணப்பட்டிருந்தும் இதனை காட்சிப்படுத்துவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 03 ஆண்டு காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டுவருபவை | 28.355 | 20.865 | 7.490 | 26.42 |
| | மூலதனம் | 13.050 | 11.257 | 1.793 | 13.74 |
| | **மொத்தம்** | **41.405** | **32.122** | **9.283** | **22.42** |
| 2016 | மீண்டுவருபவை | 182.230 | 111.005 | 71.225 | 39.06 |
| | மூலதனம் | 205.000 | 176.264 | 28.736 | 14.02 |
| | **மொத்தம்** | **387.230** | **287.269** | **99.961** | **25.81** |
| 2017 | மீண்டுவருபவை | 147.147 | 141.085 | 6.062 | 4.12 |
| | மூலதனம் | 1,763.800 | 471.566 | 1,292.234 | 73.26 |
| | **மொத்தம்** | **1,910.947** | **612.651** | **1,298.296** | **67.94** |

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை.**

03 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 50.35 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாடு எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

14 செலவு விடயங்களுக்காக ரூபா 1,715.04 மில்லியன் கூட்டு மொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 471.27 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

## 2.9 கட்டுநிதிக் கணக்கு

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி திர்த்து வைக்கப்பட வேண்டிய போிலும் அமைச்சின் 14 உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட ரூபா 677,541 செயல் நிமித்த உப கட்டு நிதியைத் தீர்த்து வைத்தல் 10 நாட்களிலிருந்து 235 நாட்கள் வரை தாமதிக்கப்பட்டிருந்த 36 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 2.10 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 845 (1) இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய கடமை தொலைபேசி பதிவேடு மற்றும் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**2.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(3) | 307,393 | மீளாய்வாண்டின் போது இடம் பெற்ற மூன்று விபத்துக்கள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கையானது விபத்து இடம் பெற்ற ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) | 191,933 | மீளாய்வாண்டின் போது ஒரு வேன் இற்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது இடம் பெற்ற விபத்துக்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்டு சமப்பிக்கப்பட வேண்டிய பூரண அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் தகிதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பரமாணம் 1646 | - | மீளாய்வாண்டில் ஓடிய 07 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவு என்பன.**

அமைச்சின் கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சரினால் ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காக ரூபா 44,267,230 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 790,486 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 15 | 08 | 07 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 39 | 25 | 14 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 19 | 18 | 01 |
| (v) | அமையம் / ஒப்பந்தம் | 05 | 03 | 02 |
| | **மொத்தம்** | **81** | **56** | **25** |

**2.13 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்**

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய ஒரு உத்தியோகத்தர் பிணை வைத்திருக்கவில்லை.